










# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி

மலர் 1 இதழ் 51 17.12.2025




ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:

# உள்ளே....

## படித்து
## பின்பற்ற வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்



# முத்துக்கள்

## பஞ்சீகரணம்

பகவான் ஸ்ரீமந்நாராயணன் உலகத்தைப் படைக்கும்போது முதலில் பஞ்சபூதங்களையும் தனித்தனியாக ஸ்ருஷ்டித்திருந்தார். பின் அவற்-றைச் சேர்ந்து கலப்படம் செய்து, அதிலிருந்து உலகத்தைப் படைத்தார்.
பஞ்சபூதங்கள் - ஆகாஸம், வாயு, தேஜஸ், ஜலம், பூமி என்றிவை.
இவற்றைக் கூட்டிக் கலப்பது பஞ்சீகரணம் என்று பெயர். இப்போது, நாம் காணும் எல்லா பொருளிலும் இந்த பஞ்சபூதக்கலப்படம் உண்டு.
எல்லாமே கலந்து வந்ததுதான்.
பஞ்சீகரணம் எப்படி நடக்கிறது என்பதை ஒரு ஸ்ம்ருதி விளக்குகிறது.
i. ஒவ்வொரு பூதத்தையும் இரண்டாகப் பிரிக்கிறார்.
ii. இரண்டு '/பாகத்தில் ஒரு பாகத்தை அப்படியே வைத்துவிடுகிறார்.
iii. மீதி / பாகத்தை நான்காகப் பிரிக்கிறார்.
iv. அந்த நான்கு பாகங்கள் ஒவ்வொன்றையும், பிரிக்காமல் தனியாக வைத்த ஒவ்வொரு '/ பாகத்துடன் சேர்த்துவிடுகிறார்.
V. இப்படி ஒவ்வொரு பூதத்தின் '/ பாகத்துடனும், மீதி நான்கு பூதங்களின் ஒவ்வொன்றின் பாகங்கள் (*/ பாகம்) கலக்கின்றன.
இதுதான் பஞ்சீகரண முறை.

சிலபேர், வேறுவிதமாக இதைச் சொல்கிறார்கள். பஞ்சீகரணம் என்-றால் ஐந்தாகப் பிரிக்கவேண்டும். நான்காகப் பிரித்தால் பஞ்சீகரணம் ஆகாது என்கிறார்கள்.
ஆனால் ஸ்ம்ருதி வசநத்தில் நான்காகப் பிரிப்பதுதான் சொல்லியுள்ளது. சதுர்தா பிந்நமேகைகமர்த-மர்த்தம் ததஸ்ஸ்திதம்] என்றுள்ளது. ஸ்ம்ருதி சொல்வதை ஏற்காமல் வாதம் பண்ணக்கூடாது.

அதுமட்டுமல்ல. ஒவ்வொரு பூதத்தையும் மொத்தமாக நாலாகப் பிரிக்கவில்லை. ஒரு பாதியைத் தனியாக வைத்துவிட்டு, மீதியைத்தான் நாலாகப் பிரிக்கிறார். அந்த பாதியையும் கணக்கிட்டால் ஐந்தாகப் பிரித்-ததாக ஆகும். இதுதான் பஞ்சீகரணம்.

உண்மையில் பஞ்சீகரணம் என்பதற்கு ஐந்தாகப் பிரித்தல் என்று அர்த்தமில்லை. ஒவ்வொன்றையும் ஐந்துமயம் ஆக்குதல் என்று அர்த்-தம். ஒரு அரை பாகம் அப்படியேயிருக்க, அதிலேயே மீதி 4 பூதங்க-ளின் நான்கில் ஒரு பங்குவீதம், கலப்பதால், ஒவ்வொன்றுமே பஞ்சபூதமயமாகிறது. ஐந்து பூதம் சேர்ந்ததாகிறது.

வேதத்தில் த்ரிவ்ருக்கரணம் என்றுதானே சொல்கிறது... மூன்று கலந்ததாகச் செய்தல் த்ரிவ்ருத்கரணம். வேதம் இதை, நமக்குப் புரியவைக்க, இப்படிச் சொல்கிறது. உண்மையில் பஞ்சீகரணம்தான். ஸப்தீ கரணம் கூட ஸர்வார்த்தஸித்தியில் சொல்லப்படுகிறது. பஞ்சபூதங்கள், மஹத், அஹங்காரம் என ஏழு கலந்ததாகச் செய்தல் ஸப்தீகரணம்.
********************************************************

**பீஷ்மரின் உபதேசம்**: - நாம் அரோக த்ருடகாத்ரராய் 100 ஆண்டுகாலம் இருக்கவேண்டுமானால் வேதவிஹிதமான கர்மாக்க-ளைக் காலம் தவறாமல் செய்யவேண்டும். அதற்கு ஆதாரமாய் இருப்-பது ஆசாரம். எம்பெருமான் ப்ரஜைகளை ஸ்ருஷ்டிக்கும்போதே வேதத்தையும் அதில் கூறப்பட்டுள்ள நற்செயல்களையும் சேர்த்தே படைத்தான். இவற்றை அநுஷ்டித்து இருமையிலும் நல்வாழ்வினைப் பெற்று வாழுங்கள் என்று உபதேசித்தான். 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'. அதனை அளிக்கவல்லது ஆசாரம். ஆசாரமின்றேல் கர்மாவை அநுஷ்டிக்க அதிகாரம் கிடையாது என்றும் கூறினான்.
********************************************************

## 'தத்த்வமுக்தாகலாபம்' என்ற நூலின் பயன் (பலன்):

i. மொத்தமும் இதில் ஸ்லோகங்கள். அதனால் மனப்பாடம் பண்ணித் தரிப்பது சுலபம்.

ii. 'வேதத்துக்கு விரோதம் இல்லாமல் தர்க்கம் செய்பவரே, தர்மத்தை அறியமுடியும்' என்று மனுஸ்ம்ருதி சொல்கிறது. மனு சொன்ன முறையை அனுஸரிப்பது இந்த நூல். வேதநெறியை அனுஸரித்த தர்க்கம்தான் இந்த நூல் முழுவதும்.

iii.அத்வைத மதத்தினர் சொன்ன தர்க்கங்கள், வேதத்துக்கு எதிரா-னவை என்பதையும் எடுத்துக்காண்பிக்கிறது இந்த நூல்.

iv. பௌத்தர்கள் முதலிய நாஸ்திகர்கள் சொன்ன தர்க்கங்கள் தவறா-னவை என்று நிரூபிக்கப்படுகிறது.

V.சிவன்தான் பரதத்வம் என்று பலபேர் கதை கட்டித் திரிகிறார்கள்.

இது வேதத்துக்கு விபரீதமானது. நான்கு வேதங்களுக்கும் ஸாரமாக, எல்லா வேதத்திலும் ஓதப்படும் புருஷஸூக்தத்துக்கு எதிரான வாதம் இது என்று ஸ்தாபிக்கிறது இந்த நூல்.

vi.புருஷோத்தமனான ஸ்ரீமந்நாராயணனே பரதத்த்வம் என்று ஸ்தாபிக்கிறது. இந்த விஷயங்களை நாயகஸரத்தில் நன்கு காணலாம். முதலிலேயே கூட

"पुंस्त्वे तत्त्वेन दृष्टे पुनरपि न खलु प्राणिना स्थाणुतादिः" [பும்ஸ்த்வே தத்த்வேந த்ருஷ்டே புநரபி ந கலு ப்ராணிநா ஸ்தா-ணுதாதி:] (ஸ்லோகம் 5) என்று ஸாதித்துள்ளார்.

**vii.மோக்ஷமடைபவனை, ஸ்ரீவைகுண்டலோகத்தில் ஐந்நூறு அப்ஸரஸ் ஸ்த்ரீகள் நல்ல ப்ரஹ்மாலங்காரம் செய்து, ப்ரஹ்மத்தை அடைவிப்பார்கள் என்று வேதம் சொல்கிறது. இந்த லோகத்திலேயே ஐந்நூறு அப்ஸரஸ்கள் போன்ற இந்த ஐந்நூறு ஸ்லோகங்கள், நம்மை அலங்கரித்து, இங்கேயே மோக்ஷ அனுபவத்தையும் தருகின்றன என்றும் ஒரு கருத்து உண்டு. இதுவும் ஒரு பலன்.**

************************************************************

## *சரணாகதி தர்ம ஸூக்ஷ்மம்:*

*ஸ்ரீமத் ராமாயணம் என்பது சரணாகதி வேதம். அது வரலாறு மட்டுமன்று; அதில் ஸத்ஸம்பிரதாய பரம்பரையாய் உபதேசமுகமாய் வந்துள்ள சரணாகதியாகிய பரமதர்ம ரஹஸ்யங்கள் பலவும் உள்ளன. அவற்றைச் சேமித்துவைத்தவர்கள் ஸ்ரீவைஷ்ணவ ஸம்பிரதாய ஸமயாசார்யர்களே. அவர்களில் நாயகஸ்ரீயாக விளங்கும் ஸ்ரீதேசிகன் உத்தரம் மிகத் தரம்; அதை இங்கு எடுத்தோதி விவரித்துத் தெளிய வைப்போம்.*

*தேவாசுரப் போரில் புறம் காட்டிய அசுரரை விஷ்ணு அவதாரஸ்தரான பெருமாள் துரத்திச்செல்ல, அப்போது மால்யவான் என்ற அசுரன், நாராயணா! யுத்தம் மனமின்றி முறிந்தோடும் எங்களைத் துரத்திச் சென்று கொல்ல நினைப்பது அதர்மம் அன்றோ? எல்லாம் அறிந்த நீர் தர்மத்தை அழிக்கலாமா?' என்று வினவப் பெருமாளின் உத்தரமாவது:*

*'சரணாகதர்களான தேவர்களுக்கு நாம் அபயப்ரதானம் பண்ணினோம். சரணாகதர், வீட்டில் வளரும் பசுக்கள் போன்றவர். பசுவைக் கொல்ல வரும் புலியைக் கொல்லும் கணக்கிலே நாம் உங்களைக் கொல்லக் கருதினோம். இப்படி, சரணாகத ரக்ஷணம் நாராயண தர்மமாகும். நாராயணா! என்று நீ அழைத்தபடியே நாராயண தர்மத்தைப் பற்றினோம். க்ஷத்திரியனாகில் அன்றோ க்ஷத்ரதர்மத்தைப் பற்றுவது?" என்றார்.*

*சரணாகத ரக்ஷணம் பரமாத்மா என்ற நிலையில் ஆத்மாநுபந்தியாக வரும் தர்மமாகும். அவதாரத்துவக்காலே ஏறிட்டு வரும் க்ஷத்ரதர்மத்தை விட்டு, ஆத்மாநுபந்தியாக வரும் தர்மத்தை ஆத்மாவாக நின்று செய்தலே சரண்ய சீலமாக இருந்தது என்ற ஸித்தாந்தத்தை வாலிவதத்திலும் அதிதேசம் பண்ணி, இதையே பெருமாள், "ஸூக்ஷ்ம: பரமதுர்ஜ்ஞேய:" என்று கம்பீரமாக அருளிச்செய்தார். இது ஸ்ரீதேசிகனின் உத்தரம்.*